தங்காலை நகர சபை - 2024
---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தங்காலை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தங்காலை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 87,593 இற்கான நூலகப் புத்தகங்கள் மூலதனச் செலவு மற்றும் மூலதன உதவி பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மூலதன செலவு மற்றும் மூலதன உதவி பெறுவனவு அந்த எண்ணிக்கையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	2024 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நிதி அல்லாத உதவிகள் மற்றும் நன்கொடைகள் கணக்கீடு செய்யும் போது இந்த முறையிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது என.	நன்கொடையாக கிடைத்திருந்த நூலக புத்தகங்களின் பெறுமதி மூலதன மானியங்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	நூலக சேர்வுப் பதிவேட்டின் படி நூலக புத்தகங்களின் மீதி ரூபா 2,836,371 தொகையாக காண்பட்டதுடன், நிதிக்கூற்றுக்களில் அவை வரை ரூபா 2,346,877 தொகை என காட்டப்பட்டிருந்தமையால், இரண்டு மீதிகளிடையே ரூபா 489,494 தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	நூலக சேர்வுப் பதிவேட்டின் படி புத்தகங்களின் அச்சிடப்பட்டுள்ள விலைப் பெறுமதி குறிப்பிடப்படுவதுடன், கணக்கீடு செய்யும் பெறுமதி கிரயப் பெறுமதியாகும். இந்த வித்தியாசத்தை சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்டும் என.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கிரயம் மற்றும் சேர்வுப் பதிவேட்டின் படி கிரயத்திற்கிடையே வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும்.
(இ)	நகரசபை பொதுச் சந்தைக் கட்டிடத்தின் 19 ஆம் இலக்க கடையறைக்காக புதிதாக மின்சார தொடர்பு பெற்றுக்கொள்வதற்கான செலவு மற்றும் பள்ளிக்குடாவ பாதை காணியின் பெறுமதியின் கூட்டுத்தொகையாகிய ரூபா 62,666 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.	நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	ரூபா 62,666 தொகை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	முன்னைய ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்து செலவு என பதியப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 740,342 தொகைக்கான நுகர்வுப் பண்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி நுகர்வுப் பண்ட இருப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கைகளில் கணக்கீட்டு குறைபாடுகளில் சரி செய்தல் என இது மேற்கொள்ளப்பட்டுள்ளது என.	மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த நுகர்வுப் பண்டங்களின் பெறுமதியை சரி செய்யப்பட வேண்டும்.

(உ)	தங்காலை பஸ் நிலையத்தின் 21 கடையறைகளுக்காக 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 543,400 இற்கான கடை வாடகை சிட்டையிடப்பட்டிருக்கவில்லை.	சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு அந்த கடையறைகளின் வாடகை அறவிடப்படாமல் இருப்பதற்காக சபையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது என.	குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெற வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 543,400 தொகை 2025 ஆண்டின் போது சரி செய்யப்பட வேண்டும்.
(ஊ)	சபையினால் வெளித் தரப்பினருக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆனால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முடிவடைந்திருக்காத ஒரு வழக்கு மற்றும் வெளிக்களத்தினரினால் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 06 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய தேவையான தகவல்கள் மற்றும் வெளிப்படுத்த வேண்டிய தேவையான சீராக்கல்கள் எதிர் காலத்தில மேற்கொள்ளப்படும் என.	சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் மற்றும் வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலவினக் கடன்பட்டோர் மீதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான கப் வண்டிக்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பான சேதத்திற்கான பெற வேண்டிய காப்புறுதி நட்டஈட்டுத் தொகை ரூபா 3.19 மில்லியன் தொகை வழங்குவதற்கு காப்புறுதிக் கம்பனியினால் மறுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை.	இந்தத் தொகை கடன்பட்டோர் மீதியில் இருந்து அகற்றுதல் மேற்கொள்ள முடியாதெனவும், சிக்கல் தன்மை காணப்படுவதனால் மீளாய்வாண்டின் கடன்பட்டோர் மீதியில் கணக்கீடு செய்யப்பட்டது என.	பெற வேண்டிய காப்புறுதி நட்டஈடு தொடர்பாக கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், குறிப்பிட்ட சம்பவம் பதிவுகளின் மூலம் விரிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(ஏ)	நகர சபையின் பழைய வாடி வீட்டு வளவு 2021 பெப்ரவரி 08 திகதிய 2214/07 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட போதிலும், 2021 ஆண்டு முதல் 2024 மே வரை சிட்டையிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய ரூபா 4.37 மில்லியன் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டு மே மாதம் வரை 05 மாதங்கள் மாத்திரம் சிட்டையிடப்பட்ட மீளாய்வாண்டிற்குரிய	சிட்டையிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக அறிவுரை பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என.	ரூபா 4.87 மில்லியனிற்கான பெற வேண்டிய வருமானங்கள் தொடர்பாக கணக்குகளில் சீராக்கல் அல்லது தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வருமானம் ரூபா 494,284 தொகை தொடர்பாக காணப்படுகின்ற நிச்சயமற்ற நிலைமை தொடர்பாக நிதிக்கூற்றுகளில் தேவையான சீராக்கல் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் உள்ளவாறு மற்றும் இறுதித் தினத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 160.79 மில்லியனிற்கான நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான உருத்துறுதி, பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாமல் உள்ளது.	நிலையான சொத்துக்கள் எதிர் காலத்தில் பெறுமதி மதிப்பீட்டுக்காக உரிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், வெவ்வேறாக நிலையான சொத்துப் பதிவேடுகள் நடாத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் உருத்துறுதிய பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20	வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் 2013 ஆண்டில் பெறுமதி மதிப்பீடு அடிப்படையில் மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவிடப்பட்டிருந்ததால், பெறுமதி மதிப்பீடு கால ரீதியாக செயற்படுத்தப்படாத காலம் 06 வருடங்களாகும்.	எதிர் காலத்தில் கிடைக்கக்கூடிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் மீது வீதவரிக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒருமுறை வீதவரி ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ)	நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 74 மற்றும் 77	நிலத்தின் உரிமை சபைக்கு சட்டரீதியாக வழங்கியிருந்த வர்த்தக வளாகத்தில் அங்கீகாரம் இன்றி நிரந்தரக் கடையறைகள் நிர்மாணிக்கப்பட்டு வாடகைத் தொகையும் செலுத்தாமல் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் 13 கடையறைகள் தொடர்பாக சட்ட ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்காலிகமாக மற்றும் நிரந்தரமாக மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளை அகற்றி அதற்குப் பதிலாக தற்காலிக வர்த்தகக் குடில்கள் நிர்மாணிக்கப்பட்டு தற்போது இருக்கும் வியாபாரிகளுக்கே வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக செயற்திட்ட அறிக்கையொன்று தயாரித்து தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என.	அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள கடையறைகள் தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகனின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
	(i) நிதிப் பிரமாணம் 371(2)	பதவியணி அல்லாத 05 உத்தியோகத்தர்களுக்கு 08 சந்தர்ப்பங்களில் ரூபா 220,990 தொகைக்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.	இந்த நிலைமை சரி செய்யப்பட்டுள்ளதுடன், முற்பணம் வழங்குதல் நகர சபை செயலாளரின் பெயரில் வழங்கப்படுகின்றது என.	நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
	(ii) நிதிப் பிரமாணம் 571	ரூபா 155,215 தொகை பெறுமதியான 02 வருடங்களை மிகைத்துள்ள 12 டென்டர் பிணை வைப்பு மீதிகளை ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் வைப்பு மீதிகள் தீர்க்கப்பட வேண்டும்.
(ஈ)	உள்ளூராட்சி ஆணையாளரின் (தெற்கு) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 05	2008 மற்றும் 2009 ஆண்டுகள் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை உடன்படிக்கை மேற்கொள்ளாமல் வெளித் தரப்பினரினால் பயன்படுத்தப்படுகின்ற இலக்கம் S-01 மற்றும் S-24 கொண்ட கடையறை தொடர்பாக முறையான	S-01 கடையறையின் வாடகை உடன்படிக்கையின் செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன்,	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி S-01 மற்றும் S-24 கடையறைகள் தொடர்பாக முறையான உடன்படிக்கைகளுக்கு அணுக வேண்டும்.

உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. S-24 இலக்கம் கொண்ட கடையறையினால் மாத்திரம் சபை இழந்திருந்த வருமானம் ரூபா 794,500 தொகையாக காணப்பட்டது.	S-24 கடையறையின் வதிவு முடிவுறுத்தப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 28,829,141 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 28,954,795 தொகையாக காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	7,670,000	7,793,676	7,751,325	2,763,997	6,880,500	8,125,611	9,836,885	2,721,646
வாடகை	20,493,000	20,580,384	26,741,663	6,060,086	19,647,200	19,778,392	20,392,721	12,221,365
அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,151,000	2,804,195	2,845,320	311,875	799,500	1,053,388	927,388	353,000
ஏனைய வரு மானங்கள்	15,831,000	21,128,059	21,898,320	2,641,679	14,724,400	21,636,030	19,818,708	3,411,940
மொத்தம்	**45,145,000**	**52,306,314**	**59,236,628**	**11,777,637**	**42,051,600**	**50,593,421**	**50,975,702**	**18,707,951**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1479 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 2.58 மில்லியன் தொகை மற்றும் 34 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 1.65 மில்லியன் தொகை நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 இன் பிரகாரம அறவீடு செய்திருக்கவில்லை.	வீதவரி மற்றும் கடை வாடகை முறையே ரூபா 990,132 தொகை மற்றும் 167,890 தொகை அறவிடப்பட்டதெனவும், மீதியை விரைவாக அறவீடு செய்யப்படும் எனவும்.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	105 விபாயார அலகுகளிலிருந்து பெற வேண்டிய வியாபார வரி மற்றும் 11 கைத்தொழில் அலகுகளில் இருந்து பெற வேண்டிய கூட்டுத்தொகை 289,840 தொகை 2023 திசெம்பர் 22 திகதிய 2364 இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி 2024 மார்ச் 31 திகதிக்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய போதிலும், அந்த அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பதிவழிப்பதற்கு தேவையான தீர்மானம் எடுப்பதற்காக அடுத்த சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான 32 ஆம் இலக்க கடையறை 1994 மே 19 திகதி முதல் வாடகைகக்கு எடுத்திருந்த வாடகையாளரினால் அந்த இடத்தில் இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணித்து சிற்றுண்டிச்சாலையொன்று நடாத்தியிருந்த போதிலும், அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் ரூபா 41,085 தொகைக்கான பெற வேண்டிய கடை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக அறிவுரை மற்றும் பரிந்துரை வழங்கும் படி ஹம்பாந்தோட்டை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளரிடம் வினவப்பட்டது என.	அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை அகற்றுதல் மற்றும் சபைக்குச் சொந்தமான ஆதனங்களை பாதுகாப்பதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
(ஈ)	2008 ஆண்டு முதல் 2023 மார்ச் 18 திகதி வரை நகர சபையின் அங்கத்தர் ஒருவருவராக செயற்பட்டிருந்த நபரொருவரினால் சபைக்கு சொந்தமான பஸ் நிலையத்தில் இலக்கம் S-01 கொண்ட கடையறையின் வாடகையாளராக காணப்படல் நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 277(1) இன் படி இணங்காத முறையில் அந்தக் காலப்	சபை அமர்வுப் படி மீண்டும் சபை நிதியத்திற்கு செலவு வைக்கும் படி அறிவிக்கப்பட்டதுடன், விசாரணை செய்யப்படுகின்ற S-01 கொண்ட கடையறையின் குத்தகை உரிமை தொடர்பாக வழக்கு அலுவல்களுக்கு பாதகமொன்று ஏற்படுமென எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டதுடன், வழக்குத்	நிலுவை வருமானம் மற்றும் சபை அமர்வுக் கொடுப்பனவு விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

	பகுதிக்காக அவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 1.86 மில்லியனிற்கான சபை அமர்வுக் கொடுப்பனவு பெறுமதி மற்றும் இந்தக் கடையறைக்காக மீளாய்வாண்டு இறுதி வரை சபைக்கு கிடைக்க வேண்டிய கடை வாடகை மற்றும் தண்டப் பணம் ரூபா 1.01 மில்லியன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தீர்ப்பு கிடைத்த பின்னர் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படும் என.	
(உ)	சபைக்குச் சொந்தமான மக்கள் சந்தையை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் மற்றும் வாடி வீட்டை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 5.47 மில்லியன் தொகை இதுவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவிலலை.	மக்கள் சந்தையை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் வாடகை அறவீடு செய்வதற்கு வழக்குத் தீர்ப்பின் படி தவணைகளாக செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது எனவும். பழைய வாடிவீடு தொடர்பாக சிட்டயிடப்பட்ட நிலுவைத தொகையை பதிவழிப்பற்கு அல்லது வேறேதும் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	04 நிரந்தர அறிவித்தல் பலகைகளில் இருந்து பெற வேண்டிய கட்டணம் ரூபா 1,010,000 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன், நிலுவை மீதியில் 02 வருடங்களை விட மிகையான மீதிகள் ரூபா 360,000 தொகை காணப்பட்டது.	குறிப்பிட்ட வியாபாரிகள் இந்தச் சேவைக் கட்டணத்தை செலுத்த மறுத்துள்ளதுடன், கட்டணத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் காண்பபடாமையால், இந்த கட்டணத்தை பதிவழிப்பதற்காக அடுத்த கூட்டத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	சபைக்குச் சொந்தமான தீ மற்றும் இடர் அலகுளில் இருந்து பெற வேண்டும் ரூபா 610,265 தொகைக்கான வருமானத்தை அறவீடு செய்வதற்கு நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 அ (1) மற்றும் (2) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவைத் தொகையில் ரூபா 90,050 இற்கான தொகையை அறவீடு செய்ய முடியாமல் உள்ளதுடன், பதிவழிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ள அனுப்பப்பட்டுள்ளது. மீதி நிலுவையில் ரூபா 40,175 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகையை செலுத்தும் படி	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

		எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என.	
(ஏ)	மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 19.25 மில்லியன் தொகையாகும்.	ரூபா 6.2 மில்லியன் தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	பிரதான செயலாளர், ஆளுனர், காணிப் பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றை தொடர்புகொண்டு முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் தீ மற்றும் இடர் முகாமைத்துவ அலகிற்குரிய ரூபா 669,600 தொகை பெறுமதியான வாகனங்களுக்குரிய பண்டங்கள் மற்றும் சபையினால் நடாத்தப்படுகின்ற முன்பள்ளியில் காணப்பட்ட ரூபா 133,400 தொகை பெறுமதியான மல்டி மீடியா பிரொக்டர் இயந்திரம் மற்றும் பிரொக்டர் திரை ஆகிய பண்டங்களின் குறைவடைதல் தொடர்பாக பண்டக் கணிப்பீட்டின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டு முறையே 10 வருடங்கள் மற்றும் 09 வருட காலங்கள் கடந்திருந்த போதிலும், சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட்டிருக்கவிலலை.	தங்காலை நீதிவான் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் பற்றாக்குறை தொடர்பாக அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படும் என.	சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 03 கட்டிட வரைபுகளுக்கு அணவல் அங்கீகாரம் வழங்கும் கட்டணம், ஒழுங்குபடுத்தல் கட்டணம் இசைவுச் சான்றுகள் கட்டணம் என கூட்டுத்தொகை ரூபா 548,991 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இசைவுச் சான்றிதழ்	வரைபுகளுக்கு புறம்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த பதவிகளுக்காக சட்டரீதியான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் படியும் அறிவிக்கப்பட்டு வரைபு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர்	அணவல் அங்கீகாரம் வழங்கும் கட்டணம், ஒழுங்குபடுத்தல் கட்டணம் இசைவுச் சான்றுகள் கட்டணம் ஆகிய அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை விரைவாக அறவீடு செய்வதற்கும், இது தொடர்பாக எடுக்க வேண்டிய சட்ட

பெற்றுக்கொள்ளாமல் வியாபார நிலையங்கள் நடாத்திச் செல்லும் 03 கட்டிங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உரிய கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்களின் படி மீளாய்வாண்டின் போது சுற்றாடல் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 13 கைத்தொழில்களுக்காக, கைத்தொழிலாளர்களை ஊக்குவித்தல் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்காமையால் பெற வேண்டிய ரூபா 64,350 இற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய கைத்தொழில்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தேவையான அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக வியாபாரிகளை ஊக்குவிக்க வேண்டும்.

3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பட்டியபொல குப்பை முகாமைத்துவ நிலையத்தின் குப்பை அடுக்கல் செயற்பாட்டிற்காக 2020 ஆண்டின் போது ரூபா 1.55 மில்லியன் தொகை செலவிடப்பட்டு திறந்த செயற்களமொன்றின் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த கருமம் இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது.	வருடாந்தம் மாகாண குறித்தொதுக்கிய ஏற்பாடுகளுக்கு விண்ணப்பித்த போதிலும், இதுவரை அதற்கான ஏற்பாடுகள் கிடைத்திருக்காததுடன், இவ்வாண்டிலும் ஏற்பாடுகளுக்காக விண்ணப்பிக்கப்பட்டது என.	விடயமொன்று திட்டமிடும் போது நிலவுகின்ற வளங்கள் தொடர்பாக மற்றும் நிதியம் தொடர்பாக கவனம் செலுத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபையினால் அனுபவிக்கப்படுகின்ற காணிகள் மற்றும் கட்டிடங்களின் கூட்டுத்தொகை ரூபா 11.09 இற்கான தொகை மற்றும் 10 ஏக்கர் 0.5 ரூட் 13.16 பர்சஸ் அளவான 15 காணிகளை சட்ட ரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என.	சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நகர சபைக்குச் சொத்தமான 03 ஏக்கர் 01 ரூட் 23.66 பர்சஸ் கொண்ட 05 காணிகளை ஆக்கபூர்வமான அலுவல்களுக்கு பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது.	பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என.	காணிகளை ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.6 செயற்திட்டங்ள், செய்பணிகள் மற்றும் மூலதன வேலைகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 2024 ஆண்டில் சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1.47 மில்லியனிற்கான மெதகெடிய சவுரிஸ் சில்வா மாவத்தையுடன் இணையும் வடிகால் முறைமையை நிர்மாணிக்கும் நிர்மாண வேலையை நிறைவேற்றுவதற்காக 2024 திசெம்பர் 31 திகதி உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி 80 நாட்களுக்குள் பெறுமான வேலையை பூர்த்தி செய்ய ஒப்படைக்க வேண்டியிருந்த போதிலும், 2025 ஏப்ரல் 28 திகதி அளவிலும் நிர்மாண வேலை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	சபையினால் எடுக்கப்பட்ட குழுத் தீர்மாணத்தின் படி இந்த நிர்மாண வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.	கருமமொன்று திட்டமிடும் போது நிலவுகின்ற வளங்கள் மற்றும் நிதியங்கள் மற்றும் அதனைச் சார்ந்த இயற்கை மற்றும் பௌதீக ரீதியான தாக்கங்கள் மீது கவனம் செலுத்தி உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.7 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2 இன் படி பெறுகைத் திட்டம், பெறுகை நேரசூசி தயாரிக்கப்பட்டு நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை.	2024 ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை நேரசூசிகள் தயாரிக்கப்பட்டு நிதி மற்றும் திட்டக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என.	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2 இன் படி பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை நேரசூசி தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சபையின் சிறுவர் விளையாட்டுத் திட்டத்திற்காக play station 01 மாதிரி உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.1, 6.3.6 மற்றும் 7.8 ஆகிய பிரிவுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையின் படி செயற்பட்டு குறைந்த விலையாகிய ரூபா 1,555,000 தொகையை கவனம் செலுத்தாமல் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மதிப்பாய்வு செய்யப்படாத விலைகூறல் ஒன்றான ரூபா 2,475,000 தொகை பெறுமதியான play station உபகரணமொன்று கொள்வனவு செய்வதற்காக பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டமையால், ரூபா 920,000 தொகை பெறுமதி மிகையாக செலுத்தப்பட்டிருத்தல் மற்றும் பெறுகைக் குறிக்கோள், சட்ட விதிகளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்தது.	மிகவும் ஆக்கபூர்வமான மற்றும் பொருத்தமான போலவே அனுமதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் உச்ச மட்ட நம்பிக்கையை பெற்றுக்கொள்ளும் உபகரணம் கொள்வனவு செய்தல் ரூபா 2,475,000 தொகைக்காக பொறுத்துவதற்கு பெறுகைக்குழு தீர்மானித்தது என.	பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவது மற்றும் கொள்வனவு செய்யும் குறிக்கோள் நிறைவேற்றப்பட வேண்டிய முறையில் சபை செயற்பட வேண்டும்.
(இ)	2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.2 இன் படி தாமதமாக கிடைக்கக்கூடிய விலைகூறல்களை திறக்கப்படாமல் மறுக்கப்படல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்காமல் ரூபா 256,500 இற்கான சீருடைகள் கொள்வனவு செய்யும் போது தாமதமாக கிடைத்த விலைகூறல்களை மதிப்பாய்வு செய்திருந்தது.	தாமதமாக கிடைத்திருந்த கூறுவிலைகளை மதிப்பாய்வு செய்யப்படவில்லை என.	பெறுகை வழிகாட்டல் கோவை 6.3.2 பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

(ஈ)	2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 7.9.2 இன் பிரகாரம் வேறு முறையொன்றின் கீழ் விலைகூறலை மதிப்பாய்வு செய்வதற்கு பெறுமதி கூட்டிய வரி இன்றி மதிப்பாய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும், சபையினால், ரூபா 467,500 தொகைக்கான 09 டயர்கள் கொள்வனவு செய்வதற்காக விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	இந்த வழுவுடனான நிலைமை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வேறு கட்டங்களின் கீழ் விலைகூறல் மதிப்பாய்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் பெறுமதி கூட்டிய வரிப் பெறுமதியை அகற்றி மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

3.8 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் 02 பதவிகளுக்குரிய 12 மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அங்கரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குமாறு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என.	சபைக்கான பதவியணி தேவைப்பாடு தொடர்பான மீளாய்வொன்று மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	சபையில் கடமையாற்றும் பெண் வருமானப் பரிசோதகர் 2024 மே 22 திகதி முதல் பிரதியாளர் ஒருவர் பின்னர் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் சப்ரகமுவ மாகாண அரச சேவைக்கு விதிக்கப்பட்டிருந்ததுடன், வருமான பரிசோதனை பதவியில் வெற்றிடத்தை நிரப்புவதற்க நடவடிக்கை எடுக்காமல், குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு 2024 ஆகஸ்ட் 12 திகதி முதல் சபையின் சுகாதார தொழிலாளர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது.	இந்த இடமாற்றத்தை தற்காலிகமாக நிறுத்தும் படியும், வருமானப் பரிசோதகர் ஒருவர் தற்காலிகமாக இணைக்கும் படி விண்ணப்பிக்கப்பட்டது என.	சபையின் முக்கியமான கருமங்களுக்காக உத்தியோகத்தர்களை தக்க வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி இடமாற்றக் கொள்கை செயற்படுத்தப்படாமையால், சபையில் கடமையாற்றும் பதவியணியினர்களில் 09 உத்தியோகத்தர்கள் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலப் பகுதியில் ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றி வருகின்றனர்.	இடமாற்றக் கொள்கை செயற்படுத்த வேண்டும் என ஏற்றுக்கொள்கின்றேன்.	இடமாற்றக் கொள்கையின் படி செயற்பட வேண்டும்.

3.9 தோற்றக்கூடிய முறைகேடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நகர சபையின் தின முத்திரையை மற்றும் கடித தலைப்பினை பயன்படுத்தி கட்டிட வரைபொன்று ஒன்றின் மற்றும் இசைவுச் சான்றிதழ் போலியாக தயாரிக்கப்பட்டு வெளி நபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த ஆவணங்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் தொடர்புபட்டு தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட நபருக்கு வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்ட போதிலும், இது தொடர்பாக ஒரு வருடம் கடந்திருந்த போதிலும், முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த சம்பவம் தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்தினால் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	முறையான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டின் மூலம் செயற்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 61.16 தொகைக்கான 11 அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டியிருந்த 09 நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதற்காக ஏற்பாடுகள் கிடைத்திருக்கவில்லை எனவும் மற்றும் சபை நிதியத்தை பயன்படுத்தி செயற்படுத்த வேண்டிய 02 நிர்மாண வேலைகள் செயற்படுத்தவில்லை என.	இலக்காகிய அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடுவதற்கும் அவற்றை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 கணக்காய்வுக் குழுக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் குறைந்த அளவு காலாண்டுக்கு ஒருமுறை அதாவது வருடத்திற்கு 04 முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2024 ஆண்டில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.	மிகையான கடமையலுவல்களில் மிகை காரணமாக குறிப்பிட்ட காலாண்டிற்குரிய நாள் கிடைப்பதில் தாமதம் ஒன்று ஏற்பட்டது. அதன் காரணமாக 04 கூட்டாக நடாத்த வேண்டியிருந்த போதிலும் 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டது என.	காலாண்டுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	03 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 85.62 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அது 17 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	மூலதன உதவி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், எதிர் பார்க்கப்பட்டவாறு அந்த உதவிகள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் ஆகும் என.	முரண்களை குறைத்துக்கொள்ள வேண்டியதுடன், அதற்கான திட்டமிடல் முறைப் பிரகாரம் காணப்பட வேண்டும். வருமானம் சேகரித்தல் செயற்திறனாக இருக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது செலவு விடயங்களிடையே ரூபா 4.75 மில்லியனிற்கான ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், செலவு விடயங்கள் தொடர்பாக சரியாக பாதீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கிக்கொள்ளாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது.	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாததுடன், எதிர் காலத்தில் ஏற்பாடுகள் ஒதுக்கும் போது இந்த நிலைமையை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	செலவுகளை சரியாக இனங்கண்டு தேவையான ஏற்பாடுகள் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

4.4 சுற்றாடச் சிக்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கியிருந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 2.2 மற்றும் 3.2 இன் படி முறையே சேதனப் பசளை உற்பத்திக்காக எடுத்து வரப்படும்	சேதனப் பசளை விற்பனையின் பின்னர் மற்றும் குப்பை செயற்களத்தின் திறந்த வெளியில் இரண்டாம் கட்ட நடவடிக்கையின் பின்னர் இந்த சிக்கல் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என.	கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ தொழிற்சாலை அமைந்துள்ள வளவில் திறந்த நிலையில் குவிக்கப்பட்டிருக்கக் கூடாது என மற்றும் சேதனப் பசளை ஆக்க முடியாத திண்மக் கழிவுப் பொருட்களை திறந்த நிலப்பரப்பில் அப்புறப்படுத்தக்கூடாது எனவும், முடிந்த அளவு மீள்சுழற்சி செய்யக்கூடிய பண்டங்களை ஒதுக்கி மீள்சுழற்சி செய்ய முடியாத பண்டங்களை மாத்திரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரையுடன் தரைகளை நிரப்புவதற்காக பயன்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.